gistered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 21 சனிக்கிழமை (03-04-2004) தொலைபேசி 2223378 ஒலி 106

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

# தபால்மூல வாக்களிப்பில்



# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாவட்ட ரீதியில் முன்னணியில்

(நமது நிருபர்)

**நடந்து முடிந்த 13வது பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பில் இன்று அதிகாலை அறிவிக்கப்பட்ட மாவட்ட ரீதியிலான முடிவுகளின்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

பொதுத்தேர்தலுக்கான கடமைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் முப்படைகளையும் சேர்ந்தவர்கள் உட்பட 2லட்சத்து 86 ஆயிரத்து 624 பேர்கள் 22தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் தபால் மூலமான வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

இத்தபால் மூலமான வாக்களிப்பு மார்ச் மாதம் 24,25ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் பி.ப. 4 மணிவரை அவரவர்களது திணைக்களங்களில் நடைபெற்றது.

22 தேர்தல் மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் மாத்திரம் நேற்று பி.ப. 4.30 மணிமுதல் தபால்மூலமான வாக்குகள் எண்ணும்பணி ஆரம்பமானது. இரத்தினபுரி மாவட்டத்தின் தபால் மூலமான வாக்களிப்பின் முதல் முடிவு நேற்றிரவு 10.30 மணிக்கு அறிவிக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4886 வாக்குகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி 2839 வாக்குகளையும் பெறறிருந்தது. ஐக்கியதேசிய முன்னணியைவிட ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 2047 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்று முன்னணியில் உள்ளது.

நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியான முதலாவது முடிவு இன்று அதிகாலை 2 மணிக்கு அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்திருந்த போதும், பதுளை மாவட்டத்தின் முதலாவது தேர்தல் முடிவு இன்று அதிகாலை 2.45 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

பதுளை மாவட்டத்தில் ஹாலி கெல தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசிய முன்னணி-19125, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 17926, தேசிய ஹெல உறுமய - 725 வாக்குளைப் பெற்று ஐக்கியதேசிய முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

மாவட்ட ரீதியில் அறிவிக்கப்பட்ட தபால் மூல வாக்குவிபரம் வருமாறு:-

**யாழ்.மாவட்டம்**

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | -3175 |
| ஈ.பி.டி.பி | -420 |
| சுயேச்சைக்குழு1 | -340 |
| புதிய இடதுசாரி முன்னணி | -07 |
| அளிக்கப்பட்டவை | -3985 |
| செல்லுபடியானவை | -3946 |

**பதுளை மாவட்டம்**

| | |
|---|---|
| ஐ.ம.சு.கூட்டு | -9025 |
| ஐ.தே.கட்சி | -5523 |
| ஜாதிக ஹெல உறுமய | -654 |
| மொத்த வாக்குகள் | -15520 |
| செல்லுபடியானவை | -15234 |

**அம்பாந்தோட்டை மாவட்**

| | |
|---|---|
| ஐ.ம.சு.கூட்டு | -5669 |
| ஐ.தே.கட்சி | -2743 |

(8ஆம் பக்கம் பார்க்க)

## 70-80 வீதமானோர் வாக்களிப்பு

(கொழும்பு)

நேற்று நடந்தமுடிந்த 13ஆவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் நாடு தழுவிய ரீதியில் 70முதல் 80 சதவீதமான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மாவட்ட ரீதியில் அளிக்கப்பட்ட வாக்கு விபரம் வரமாறு,

கொழும்பு-72%,கம்பஹா-70%, களுத்துறை-75%, நுவரெலியா-82%, அம்பாந்தோட்டை-75%, யாழ்ப்பாணம்-50-55%, வன்னி-54%, மட்டக்களப்பு-75%(தமிழ்-65%, முஸ்லிம்-90%), திகாமடுல்ல-75%, திருகோணமலை-72%, புத்தளம்-70%, அநுராதபுரம்-75-80%, பதுளை-75%, இரத்தினபுரி-75-80%. (ம)

## பொலிஸார் முன் விழுந்த கள்ள வாக்காளர் அட்டைகள்

### வாக்காளர் தப்பி ஓட்டம்

(சாவகச்சேரி)

பெருமளவான வாக்காளர் அட்டைகளுடன் வாக்களிப்பு நிலையப்பகுதிக்கு சென்றபொழுது வாக்காளர் அட்டைகள் தவறுதலாக பொலிஸார் முன்பாக விழுந்தது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட நபரை பொலிஸார் பிடிக்க முயற்சித்த சமயம் அந்நபர் மோட்டார் சைக்கிளில் ஏறிதப்பி ஓடினார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் சாவகச்சேரியில் இடம்பெற்றது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையத்துக்கு நபர் ஒருவர் 50 வாக்காளர் அட்டையுடன் சென்ற போது அங்கு பாதுகாப்பு கடமையிலிருந்த பொலிஸார் முன்பாக வாக்காளர் அட்டைகள் அனைத்தும் தவறுதலாக கீழே விழுந்தன. கீழே விழுந்த வாக்காளர் அட்டைகளை பிரஸ்தாப நபர் பொறுக்கி எடுப்பதற்கு முயன்ற வேளையில் காவல் கடமையில் நின்ற பொலிஸார் அவரைக்கைது செய்ய முயன்றனர்.

இதனால் கையில் எடுத்த வாக்காளர் அட்டைகளை வீசி எறிந்துவிட்டு பிரஸ்தாப நபர் தலை தெறிக்க தப்பி ஓடினார். பொலிஸார் அவரை துரத்திப்பிடிக்க முயன்றபோதும் அது கைகூடவில்லை. பொலிஸார் தன்னைப்பின் தொடர்ந்து பிடிக்கலாம் என்ற அச்சம் காரணமாக வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் பிரஸ்தாப நபர் தப்பிஓடியுள்ளார். (த-29)

### கைதுச் சம்பவத்தையடுத்து

## பரு.பொலிஸ் நிலையம் முன் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று மாலை அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற தேர்தலின் போது இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் 6 பேரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க கோரியே பொதுமக்கள் பொலிஸ் நிலையம் முன்பாக ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டு அங்கிருந்து துரத்தினர். பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலையில் இடம்பெற்ற வாக்களிப்பில் வன்முறைகள் இடம்பெற்றதாகத் தெரிவித்தே பொலிஸார் 6பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரின்களின் பெயர் விபரம் வருமாறு.

த.நிர்வானந்தன்,வை.உமாதேவி, பா.கஜேந்திரன், ம.ஜெராட், எஸ்செந்தில்வேல, ஏ.கிருஷ்ணதாஸ் ஆகிய ஆறு பேருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.(த-43)

## யாழ்.மாவட்டத்தில் நியாயமான தேர்தல் நடைபெறவில்லை

### ஈ.பி.டி.பி, சுயேச்சைக்குழு 1 முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 13 ஆவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் யாழ்.மாவட்டத்தில் நியாயமான முறையிலும் நேர்மையான முறையிலும் நடைபெறவில்லையென ஈ.பி.டி.பி, மற்றும் சுயேச்சைக்குழு 1 என்பன தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறவில்லை எனவும் இதில் தேர்தல் அதிகாரிகளின் பலவீனங்கள் மிகுந்து காணப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் மறுவாக்களிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-4-19)

## துப்பாக்கி முனையில் வாக்காளர் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் மற்றும் கொடிகாமப் பகுதியில் வாக்காளர்கள் சிலர் துப்பாக்கி முனையில் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

முகமாலையிலிருந்து மினிபஸ் ஒன்றில் பொலிஸ்பாதுகாப்புடன் வாக்காளர்கள் சிலர் ஏற்றி வரப்பட்டனர். மினிபஸ்ஸிற்கு பின்னால் பிக்கப் வாகனம் ஒன்றிலும் இளைஞர்கள் சிலர் சென்றுகொண்டிருந்தனர்.

இதன்போது மிருசுவில் பகுதியில் பிரஸ்தாப மினிபஸ் கல்வீச்சுக்கு இலக்கானதாக தெரிவிக்கப் படுகின்றது. இதனைத் தொடர்ந்து வாகனமொன்றில் (என்.பி.ஜி.ஈ-5245) அங்கு வந்த பொலிஸார் இருவர் பொல்லாந்தடியால் வீதியில் நின்ற வாக்காளர் சிலரைத் தாக்கியதுடன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற பொதுத் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்தது

### தேர்தல் ஆணையாளர் பெருமிதம்

(கொழும்பு)

இலங்கையின் 13 ஆவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் ஒப்பீட்டு ரீதியில் வெற்றிகரமாகவும் அமைதியாகவும் நடைபெற்றதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா உத்தியோக பூர்வமாக நேற்றிரவு அறிவித்துள்ளார்.

ஹிங்கிரங்கொத்தை மற்றும் புத்தளம், ஆனைமடு ஆகிய இடங்களில் சில வன்முறைச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்றதாக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி இடங்களில் மறுவாக்குப் பதிவு செய்யவேண்டுமா என்பது பற்றிய தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களுக்காக தாம் காத்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்ததற்காக அரசியல் கட்சிகள் சுயேச்சைக்குழுக்கள் மற்றும் அவர் பிரதிநிதிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் நன்றி தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச)

# 10 வருட சிறைவாசத்தின் பின்பு லைலா கானாவுக்குத் தீர்ப்பு!

முன்னாள் துருக்கியப் பாராளு மன்ற உறுப்பினரும் துருக்கியின் நவீன ஜனநாயக முன்னோடிகளில் முக்கியமானவர் என்று கருதப்படு பவருமான லைலா கானாவுக்கு எதிரான தீர்ப்பு இன்று வழங்கபபட விருக்கிறது.

சுமார் 10 வருட காலமாக சிறை வைக்கப்பட்டிருந்த லைலா கானா நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய் யப்பட்டார். குர்திஸ் இனத்தவரான லைலா குர்திஸ்தான் கிளர்ச்சியா ளர்களுக்கு உதவிபுரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய் யப்பட்டுக் கடந்த 10 வருடகால மாகச் சிறையிலடைக்கப்பட்டார்.

ஆயினும் மிகவும் முற்போக்குச் சிந்தனையும், பல்லின ஜனநாயக மற்றும் மனித உரிமை ஆர்வல ரான லைலா துருக்கி அரசாங்கத் தின் மனித உரிமை மீறல்களுக் கெதிராக மேற்குலகின் கவனத் தைத் திருப்புவதில் பெற்றி கண் டார். அதன் காரணமாகவே அவர் பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில சிறைவைக்கப்பட்டதாகச் செய்தி கள் கூறுகின்றன.

இவ்விதமிருக்க லைலா கானா வுக்கு எதிரான வழக்கு ஏற்றுக் கொள்ள முடியாதது என்று மனித உரிமை ஆர்வல்களும் மேற் குலக மனித உரிமை அமைபபுக் களும் குரல்கொடுத்துள்ளன. (யே)

# சூடானில் பதற்ற நிலை 30 முற்போக்காளர் கைது!

சூடானின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகு மாறு அந்நாட்டு இஸ்லாமிய முற் போக்குவாதிகள் வலியுறுத்தியுள் ளார்கள். அந்நாட்டில் நிலவுகின்ற பதற்ற நிலையை அடுத்து 30 முற் போக்குவாதிகள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

எதிர்க் கட்சியான பொப் பயூலர் காஸ்கிரஸின் தலைமையகத்தை சூடான் படைகள் முற்றுகையிட்ட தோடு, அங்கிருந்த 30 பேர் கைது செய்யபபட்டுள்ளார்கள். தமது கட் சியின் கொள்கைகளையும் முற் போக்கு வாதத்தையும் முன்னெ டுக்க முடியாத ஒரு தலைவர் தம க்கு அவசியமில்லை எனறும் அவர் கள் தெரிவித்துள்ளார்கள்.

2001இல் சூடானில் ஏற் பட்ட கிளர்ச்சியின் பின்னர், அந்த நாட்டு ஜனாதிபதி ஓமர் ஹஸன் அல் பஸீர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுக் கடந்த ஒக்டோபர் மாதம் விடுவக்கபபட்டார். இதனை யடுத்து அந்த நாட்டின் எதிர்க் கட்சிகள் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. (யே)

# எலிசபெத் மகாராணியார் பிரான்ஸ் நாட்டுக்கு விஜயம்

(லண்டன்)

எலிசபெத் மகாராணி அடுத்த வாரம் பிரான்ஸுக்கு நட்புறவு விஜ யம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் இடையே நிலவிவரும் பனிப் போர் காரணமாக இவ் இருநாடுகளுக் கும் இடையே வரலாற்று ரீதியாக இருந்துவரும் விரிசல்களைப் போக் கும் முகமாகவே அவர் இவ் விஜ யத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவ்விரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவது தொடர்பாகவும் அங்கு விஜயம் மேற்கொள்ளும் எலிசபெத் மகாராணி ஆராய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிய யுத்தத்தின் போது பிரித்தானியப் படைகளுக்கு ஆதர வாக பிரான்ஸும் தனது படை களை அனுப்பி இருந்தது தெரிந் ததே. (யே)

# கொலம்பியர் புலம்பெயர்வு

ஜனநாயக மனித உரிமை மீறல்கள் காரணமாகக் கொலம் பியாவிலிருந்து அதிகமானவர்கள் புலம்பெயர்ந்துள்ளதாக அறிக்கை கள் தெரிவிக்கின்றன.

கடந்த 4 தசாபதங்களாக அந்த நாட்டில் இடம் பெற்றுவரு கின்ற உள்நாட்டு யுத்தம் காரண மாக மில்லியன் கணக்கான மக் கள் அகதிகளாக இடம்பெயர்ந் துள்ளனர் என்று தெரிவிக்கப்படு கிறது. (யே)

# நாஸாவுக்கு 235 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்பட்டது

நாஸா விண்வெளி ஆய்வு கூடம், விண்கலங்களின் மேலதிக பாதுகாபபுக்கென்று விஷேட கவச மொன்றை உருவாக்கும் முயற்சி யில் ஈடுபட்டுள்ளது.

மிக முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படும் கொலம்பிய விண் கலம் பாதுகாப்புக் கவசமின்மை காரணமாகப் பூமிக்கு 1000ம் கி.மீற் றர் தூரத்தில் வைத்து வெடித்துச் சிதறியதில், முன்னணி விண்வெளி வீரர் பலர் உயிரிழந்தமை குறிப் பிடத்தக்கது. இதனையடுத்து நாஸா இந்தப்புதிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக நாஸாவின் பேச்சாளர் நாஸா கீ தெரிவித்தார். இதற்காக 235 மில்லியன் அமெ ரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள் ளதாக அவர் தெரிவித்தார். (யே)

உலக தரிசனம்

# துருக்கிய தீவிரவாதிகள் இத்தாலியில் வைத்துக் கைது

துருக்கிய தீவிரவாத அமைப் புகளுடன் தொடர்புடைய 5 சந் தேக நபர்களை இத்தாலியப் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

துருக்கி, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த இவ் ஐந்து பேரும் "இஸ்லாமிய மக்கள் விடு தலை முன்னாள்" என்னும் தீவிர வாத அமைப்புடன் தொடர்புபட்ட வர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளன.

இத்தாலியின் உரோம் நகரம் உட்பட பல்வேறு முக்கிய நகரங் களில் வைத்தே இவர்கள் அனை வரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் இத்தாலி யப் பாராளுமன்றத்துக்கு சேதம் விளைவிக்கும் நோக்குடன் இத் தாலியினுள் ஊடுருவினார்கள் என பதும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (யே)

# சைபீரியப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படலாம்

## ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை

சைபீரியப் பிரச்சினைகள் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து வைக் கக் கூடியன என ஐரோபபிய ஒன் றியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

துருக்கிய சைபிரஸ், கிரேக்க சைபிரஸ் ஆகிய இரு நாடுகளுக் கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் விஜயம் ஒன்றை மேற்கொள்வதன் மூலம், இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியுமெனத் தெரி விக்கபபடுகிறது.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் சைபீரியாவுக்கு அங்கத்துவம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு அங்கத்துவம் பெறும் சைபீரியா ஒரு தனிநாடாக விளங்கு வதையே தான் விரும்புவதாக ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரி வித்தார். (யே)

# ஆப்கானைக் கட்டியெழுப்புவது பற்றி 50 நாடுகள் கூடி ஆராய்வு

ஆப்கானிஸ்தானின் அபி விருத்தி தொடர்பாக 50 நாடுக ளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் கூடி கடந்த இரு தினங்களுக்குக் கலந்துரையாடல்களை நடத்தி யுள்ளனர்.

இந்தக் கலைந்துரையாட லில் பங்கேற்ற ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட்ஹர்சாய், மேற் படி 50நாடுகளின் தலைவர்களை யும் ஆபகானைக் கட்டியெழுப்ப 275 பில்லியன் அமெரிக்க டொலர் தேவை எனக்கேட்டுள்ளார்.

இதேவேளை, அடுத்த 2014 ஆம் ஆண்டுக்குள் ஆப்கான் நாட்டைக்கட்டியெழுப்பி, சட்டபூர்வ மான நிலைக்கு இட்டுச் செல் வதுடன், நேரடியான ஜனநாயக முறைக்கும் ஸ்திரமான ஆட்சித் தன்மைக்கு நாட்டை அழைத்துச் செல்லவிருப்பதாக அந்த நாட்டின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க, குழபபமடைந்துள்ள ஆப்கானைக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச சமூகம் உதவி வழங்கவில்லை யெனில், அபிவிருத்திப் பணிகள் சாத்தியமில்லையெனவும், சர்வ தேச ரீதியில் ஆப்கான் ஒரு வறிய நாடென்பதால் சர்வதேச சமூகத் தின் உதவியின்றி அந்த நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாத நிலை இருப்பதுடன், சட்டவிரோத மான போதைப் பொருள் விற் பனையிலேயே அந்த நாடு தங்கி யிருக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் ஐ.நா.எச்சரித்துள்ளது. (உ)

# ஜெயலலிதாவின் தேர்தல் பிரசாரம்

கடந்த மாதம் 09ஆம் திகதி முதல் தமிழகத்தின் பல மாவட்டங்களில் தேர்தல் பிரசாரம் செய்த முதலமைச்சரும் அ.இ. அ.தி.மு.கவின் பொதுச் செயலா ளருமான ஜெயலலிதா நேற்று முன்தினம் சென்னை கோரூரிலும் திருவள்ளூர் மாவட்டத்தின் பல கிராமங்களிலும் தேர்தல் பிரசாரம் செய்தார். சர்வதேச அரங்கில் இந்தியா புகழ்பெற்று விளங்கவும் நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொரு ளாதார வலுப்பெறவும். வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜன நாயக கூட்டணியை ஆதரரிக்கு மாறு மக்களைக் கேட்டுக்கொண் டார். (து)

# செல்வாக்கை இழந்து வரும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தனது செல்வாக்கை அந்நாட்டு மக்கள் மத்தியில் தொடர்ந்தும் இழந்து வருகிறார்.

எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி பிலிப்பைன்ஸின் ஜனாதி பதித் தேர்தல் நடைபெறவுள்ளது இத்தேர்தலில் அந்நாட்டின் பிரபல நடிகரும் சமூகச் சேவகருமான பெர்னாண்டோ போய் வெற்றி பெறும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவரு கிறது.

அந்நாட்டின் கருத்துக்கணிப்பின் படி பெர்னாண்டோ 39.4 சதவீத வாக்குகளைப் பெறுவார் என்றும் ஜனாதிபதி குளோரியா மைக்கப்பால் அரய் 32.9 சதவீத வாக்குகளைப் பெறுவார் எனவும் தெரியவந்துள் ளது. (தி-63)

# மனித உரிமைகளை மீறும் சீனாவிற்கு எதிராக அமெரிக்கா ஐ.நாவில்

## கண்டனத் தீர்மானம்

(பீஜிங்)

சீனாவின் மனித உரிமை மீறல்களையும் அதன் மனித உரி மைக் கொள்கைகளையும் கண் க்கும் தீர்மானம் ஒன்றை ஐக்கிய டுகள் சபையில் அமெரிக்கா கல் செய்துள்ளதை சீன அரசு த்துள்ளது.

பீஜிங் நகரில் டினாமென் சது தில் சீனா ஊழல் ஜன நாய தரவாளர்கள் மீது இரா ணுவ அடக்குமுறை நடத்தியது டன், ஜனநாயக அரசியல் மற்றும் மதக்குழுக்களை அடக்கியொடுக் கியது.

இதனை அவதானித்த அமெரிக்கா, சீன அரசுக்கு எதி ரானவர்களை சித்திரவதை செய் தது. கொலை செய்வது போன்ற மனித உரிமை மீறல்களை கை விடும்படி சீன அரசை வலியுறுத்தி வந்ததுடன், சீனவைக் கண்டிக்கும் தீர்மானங்களை 1989ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் கமிஷனில் கொண்டு வந்தது.

அமெரிக்காவின் செயற் பாட்டை எதிர்த்து வந்த சீன அரசு, தற்போது மனித உரிமை தொடர் பாக அமெரிக்காவுடன் நடத்தி வரும் பேச்சுவார்த்தையை நிறுத்தி வைத்துள்ளது. (து- 10)

# இரகசிய இடத்தில் உள்ள சதாம் வாய் மூடி மௌனம் காக்கிறார்

(வாஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்திடம் பிடி பட்ட சதாம் ஹுசைன் ஈராக்கில் இரசிய இடத்தில் அடைத்து வைக் கப்பட்டு இருக்கிறார் என்றும் அவரி டம் சி.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை செயதபோது, சதாம் ஹுசைன் அதி காரிகளின் அந்தக் கேள்விகளுககும் பதில் அளிக்காமல் வாயமூடி மௌ னம் சாதிக்கின்றார் எனவும் தெரி விக்கப்படுகின்றது.

இதனையடுத்து சாதா ஹுசைனை விசாரணைசெய்த சி.ஐ.ஏ அதிகாரி கள் அவரிடம் இருந்து தகவல எது வும் பெறமுடியாது என்பதைத் தெரி நது கொண்டு வழக்கு விசாரணைக் கான ஆதாரத்தையாவது திரட்ட முடியுமா என்று முயற்சித்துப் பார்க் கிறார்கள். (உ-10)

# தேசவழமை

## மூன்றாம் அத்தியாயம்

### கணவனும் மனைவியும் மரணித்தபின் சொத்துகளைப் பங்கீடு செய்யும் விதங்கள்

ஒரு பெண்ணின் தாயினுடைய பெண்வழி உரிமையாளரே தாய்வழிப்போத்தியின் பெண்வழி உரிமைப்பிள்ளையோ உள்ளவரை, அவளுடைய தந்தை வழி முதுசொமான சொம்கள் ஆண்மக்களுக்குச் சேரமுடியாது என வாதிடுவோர் சிலர் மட்டக்களப்பில் உள்ளனர். மனைவியான ஒருத்திக்குப் பெண் மக்கள் இல்லாதவிடத்தும் அவளுடைய முதுசொமான சொம்கள் ஆண்மக்களைச் சேரும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர்.

கணவன், மனைவி காலஞ்சென்றபின்பு, அவர்கள் இருவரும் கூடிப்பெற்ற ஆண்மக்கள் இல்லாதிருப்பினும், பொதுவான பெண் மக்கள் மட்டுமே உள்ளார்களானால், பெற்றோர்கள் விட்டுச் சென்ற காசு, தானியம், தட்டு முட்டுகள், ஆடு,மாடுகள் ஆகியன அப் பெண்பிள்ளைகளின் உரிமையாகும்.

## நான்காம் அத்தியாயம்

### தாய்வழி முதுசொமான ஆதனங்களின் உரிமை வகை

36. பெண்ணொருத்தி இறக்குமிடத்து, அவள் விட்டுச் செல்லும் அசைவற்றனவான முதுசொம் எல்லாம் அவளுடைய பிள்ளைகளுக்குத் தாய்வழி முதுசொம் ஆகும். தாயினைப்பொறுத்தவரையில் அவளுடைய முதுசொம் தாய்வழியாகவோ வேறு வழியாகவோ கிடைத்திருப்பினும், அச்சொத்துக்களைப் பற்றிய நியதிகள் மேல்வருவனவாகும்.

1. ஆட்சி உரிமை எல்லாப்பெண் மக்களுக்கும் சம பங்குகளாகச் சேரும்.
அவர்களில் எவரேனும் மரணமுற்றால் ,மரணமானவரின் பங்கு அவரின் பெண் வழி உரிமைப் பெண்பிள்ளைகளைச் சேரும்.
பெண்மக்களோ அவர்களின பெண் வழி உரிமைப்பெண் பிள்ளைகளோ உள்ளவரை ஆட்சி ஆண்மக்களுக்கு உரிமையாவதில்லை.
மிகநெருங்கிய உறவுகொண்ட பெண்வழி உரிமைப் பெண்பிள்ளைகளோடு, தூரத்து உறவு முறையினரான, அவ்வகையான பெண்பிள்ளைகளும் தாய்மார் மூலமாக ஆட்சி உரிமையிற் பங்கு பெறுவர்.

2. உடைமையானது அவளுடைய ஆண்மக்களுக்கு சமபங்குகளில் உரித்தாகும்.
ஆண் பிள்ளைகளில் எவரேனும் அவளுக்கு முன்பு மரணமாகிப் போனால், அவர்களின் சார்பில் அவர்களுடைய ஆண்பிள்ளைகளில் உடைமையிற் பங்கு பெறுவதுதில்லை.
அவளுடைய ஆண்மக்களோ பெண்வழி உரிமை ஆண்பிள்ளைகளோ இருக்கும் வரையிற் பெண்பிள்ளைகளுக்கும் அவர்களின் பெண்வழிச் சந்தானத்திற்கும் உடைமை குறித்து உரிமை சேருவதில்லை.
மிகக்கிட்டிய பெண் வழி உரிமை ஆண் பிள்ளைகள் தாங்களே உடைமையைப் பெற்றுக்கொண்டு தூரத்து உறவு முறையினரான பெண்வழி உரிமை ஆண்பிள்ளைகளுக்குப் பங்கு கொடுக்கமாட்டார்கள்.

3. போகஉரிமை அவளுடைய ஆண்பிள்ளைகளுக்குச் சமபங்குகளிற் சேரும்.
அவளுக்கு முன் மரணமாகிய ஆண்பிள்ளைகளின் மக்கள், தங்கள் பெற்றோர் சார்பில் உடைமையிற் பங்கு பெறுவதற்கு உரிமை கொண்டிருப்பதில்லை. தங்கள் ஆண் சகோதரம் உள்ளவரைப் பெண்வழி உரிமைப்பெண்பிள்ளைகள் போகத்தில் உரிமை பெறுவதில்லை. அவளுடைய ஆண்பிள்ளைகள் எல்லோரும் இறந்து போனாற் போக உரிமையானது அவளுடைய பெண் மக்களுக்குசம பங்குகளிற் சேரும்.
ஆண்மக்கள் எல்லோரும் இறந்ததன் விளைவாகப் போக உரிமை பெண்மக்களைச் சேரும் இடத்து அவர்களுள் எவரேனும் ஒருவர் இறந்து போனால், அவளுடைய பங்கினை அவளின் பிற் சந்ததியினர் சமபங்குகளாகப் பிரித்தெடுப்பர்.

4. விற்கும் உரிமை அவளுடைய பெண் மக்களுக்கு உரியதாகும். ஆனால் அது ஆண் மக்களின் போக உரிமைக்குக் கட்டுப்பட்டதாயிருக்கும்.
செய்கை பண்ணுதல், இறைகடன் கொடுத்தல் என்பவற்றால் ஏற்படும் செலவுகளை நிவர்த்திசெய்தற்பொருட்டு போக உரிமையாளர் விற்பனை செயவதற்கு உரிமை பெறுவர்.

37. ஆதனஉரிமைகள் பற்றிய மேலான சில விபரங்கள்:

1. 36வது விதியிற் சொல்லப்பட்டவாறு , ஓர் ஆதனம் மீதான ஆட்சியிற் பங்குடைய பெண் இறக்குமிடத்து அவளுடைய பங்கு அவளுடையபெண்பிள்ளைகளைச் சேரும்.

2. ஆண் ஒருவனுக்குள்ள உடைமை உரிமை அவனுடைய ஆண் மருமக்களுக்கு நேர்வழியாகவே சேரும். ஆண் சகோதரனும் ஆண்பிள்ளைகளும் இல்லாதவிடத்தும், குணபேதம், குழந்தைப்பருவம் போன்ற காரணங்களினால் உள்ள சகோதரனோ, ஆண்பிள்ளைகளோ இயக்கமற்று இருப்பினும் விதி விலக்காகும். வேறெக் காரணத்தாலும் உடைமை பெண்களுக்கு உரிமையாவதில்லை.

3. ஒருவனுடைய போக உரிமை அவன் இறக்கும்போது,அவனுடைய ஆண் சகோதரர்களைச் சேரும். அச் சகோதரருள் எவரேனும் இறந்திருப்பின் அவருடைய பிள்ளைகளுக்குப் பங்கில்லை. ஆண் சகோதரர் எல்லோரும் இறந்து விட்டால் உரிமை இருக்கின்ற சகோதரிகளுக்குச் சம பங்குகளாகிச் சேரும்.
அச் சகோதரிகளில் ஒருவர் இறக்குமிடத்துப் போக உரிமை அவளுக்குரிய பங்கு அவளுடைய ஆண்மக்களுக்குச்சம பங்குகளிற் சேரும்.
எனவே போக உரிமை (1) தாயிடமிருந்து அவளுடைய ஆண் மக்களுக்கும்(2) ஆண் ஒருவரிடமிருந்து ஆண் சகோதரன்களுக்குச் சேரும். (3) ஆண் சகோதரர் எல்லோரும் இறந்து போனால், அது சம பங்குகளில் உள்ளவர்களான சகோதரிகளுக்குச் சேரும். இறந்து போன சகோதரிகளின் பிள்ளைகளும் முறைப்பாட்டின் மூலமாக உரிமை பெறுவர்.
மிகக்கிட்டிய பெண்வழி உரிமை ஆண்பிள்ளை உரிமை பெறுமிடத்துத் தூரத்து உறவினரான அத்தகைய உரிமைப்பிள்ளைகள் பங்கு பெறுவதில்லை.

4. விற்பனை உரிமை, ஆட்சி உரிமை பெற்றவர்களுக்கு உரியதாகும். அதுவும் போக உரிமையாளரின் உரிமைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கும்.
செய்கை பண்ணுமிடத்து வரிகளைச் செலுத்துவதனாலும் ஏற்படும்கடன்களைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு ஆதனங்களை விற்பனை செய்வதற்குப் போக உரிமையாளர் எக் காலத்திலும் உரிமை கொண்டிருப்பர்.

38. தாய்வழி முதுசொம் பற்றிய பொதுவிதிகள்:

1. ஆண், பெண் சகோதரர்களாய் உள்ளவர்களும், அவர்களின் பிற் சந்ததியாரும், ஒரு தாயின் பிள்ளைகள் அல்லாதவிடத்து அவளுடைய முதுசொமான அசைவுள்ள , அசைவற்ற சொம்களில் ஏதுவிதமான உரிமையும் பெறுவதில்லை.

2. தாய்வழி முதுசொமை பொறுத்தவரையிலே தந்தை மூலமான உறவுகள் கவனிக்கப்படுவதில்லை.

3. ஆண் ஒருவனுக்குப் போக உரிமை கொடுக்கப்படும் போது உடைமை உரிமையும் அவனிடமே வழங்கப்படும். ஆனால் உடைமை உரிமை ஒருவனுக்குக் கொடுக்கப்படுமிடத்துப் போக உரிமையும் அவனுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்ற கட்டாயமில்லை.
உடைமையும் போகமும் ஒருவருக்குக் கொடுக்கப்படுமிடத்து அது "சீவிய உரித்து" என்று சொல்லப்படும்.

(தொடரும்)

## லங்கா பத்திரிகையின் பணியாளர் கடத்தப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வாராந்தம் வெளிவரும் "லங்கா" பத்திரிகையின் பணியாளர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் கடத்தப் பட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் ஆதரவாளர்கள் இவரைக் கடத்தி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இக் கடத்தல் சம்பவம் குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும்,நேற்று மாலை வரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என "லங்கா" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தர்மசிறி காரியவசம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்கிடையில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சி மீதான இக் குற்றச்சாட்டினை அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சங்கைக்குரிய அத்துரலிய ரத்ன தேரர் நிராகரித்துள்ளார். (தி-61)


## உரிய நேரத்தில் செல்லத்தவறிய உயர் அதிகாரிகள் மீது நடவடிக்கை

(காலி)


காலி மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு உரிய நேரத்தில் செல்லத் தவறிய 50 உயர் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இவர்கள் அனைவரும் உரிய நேரத்துக்குச் செல்லத் தவறிய காரணத்தால் இவர்களுக்குப் பதிலாக மாற்று உத்தியோகத்தர்கள் அக் கடமைகளைப் புரிவதற்கு தேர்தல் திணைக்களத் தால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக 670 உயர் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டமை தெரிந்ததே. (தி-61)



யாழ். பிரதேச செயலகத்தின் யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வலயப் பிரிவுக்கு உட்பட்ட ஜே/67 திருநகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய 4 மாணவர்கள் அண்மையில் பாடசாலையில் இணைக்கப்பட்டனர். இவர்களுடன் பாடசாலை அதிபர் ,ஆசிரியர்கள், சமுர்த்தி முகாமையாளர் ம.கியூமன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபர் எஸ். தவராஜா மற்றும் அவரது பாரியார் ஆகியோர் பாடசாலைச் சமூகத்தினரால் வரவேற்றகப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:பரு. நிருபர்)



யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள கணனிக் கற்கை மையத்தை யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் கணனி ஒன்றை இயக்கி ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் பொறுப்பாசிரியர் மோகனதாஸ் ,அதிபர் வ.மாணிக்கம் மற்றும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விகனேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## இறை நேசச் செல்வர்

இந்த உலகத்தில் எத்தனையோ இறை நேசச் செல்வர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இளம் வயதில் அவர்கள் எப்படி இருந்திருக்கிறார்கள் என்று பார்கின்ற போது நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கும். ஒரு பள்ளிக்கூடத்தில் வகுப்பு நடந்து கொண்டிருக்கின்றது. ஆசிரியர் மாணவர்களுக்கு இலக்கணப்பாடம் நடத்திக்கொண்டிருந்தார் "அமீர் கைதை அடித்தான் என்கிறார். இதைக்கேட்ட மாணவன் திடீரென்று எழுந்து ஏன் சார்? உண்மையிலேயே அமீர் கைதை அடித்தானா?" என்று கேட்டார். "இல்லை .ஒரு உதாரணத்திற்காக அப்படிச் சொன்னேன். இலக்கணப் பாடத்தை உங்களுக்கு விளங்க வைப்பதற்காக இந்த உதாரணம் என்றார் அந்த ஆசிரியர்.

அவ்வளவு தான் உடனே அந்த மாணவர் என்ன சொன்னார் தெரியுமா? "ஒரு பொய்யுடன் ஆரம்பமாகும் இந்தப் படிப்பு எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று கூறிவிட்டு வெளியே வந்துவிட்டார்.

பாருங்கள் அவர் ஒரு உதாரணத்துக்காக பொய் சொன்னதைக் கூட அந்த இளைஞரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உண்மை மீது அவ்வளவு மதிப்பு வைத்திருந்த அந்த இளைஞர் பிற்காலத்தில் ஒரு பெரிய மகானாக மாறினார். இறை நேசச் செல்வராக ஆனார் அவரே ஆபூபக்கர் ஹிப்லீ.

இன்னொரு பள்ளிக்கூடத்திலும் வகுப்பு நடந்து கொண்டிருக்கின்றது. ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். மாணவர்கள் பாடம் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அந்த சமயத்தில் திடீரென்று தெருப்பக்கம் ஏதோ சத்தம் கேட்கிறது. ஒரே கூச்சல். வரவர கூச்சல் அதிகமாகிறது. என்ன விஷயம் என்று தெரியவில்லை.ஆசிரியர் ஒரு மாணவனைக் கூப்பிட்டு "வெளியில் என்ன சத்தம்? நீ போய் பார்த்துக்கொண்டுவா" என்று அனுப்பி வைத்தார். அந்தப் பையன் ஓடிப்போய் பார்த்துவிட்டு வந்த பின் தான் விஷயம் தெரிந்தது.

அதாவது அந்த வீதியில் யானை ஒன்று வந்துகொண்டிருக்கிறது. அதையே வேடிக்கை பார்ப்பதற்காக வந்த மக்கள் போடும் சத்தம் தான் அது. தெருவில் யானை வருகிறது என்று கேள்விப்பட்ட உடனே வகுப்பில் உட்கார்ந்திருந்த மாணவர்கள் முகத்தில் எல்லாம் ஓர் ஆர்வம். அதைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டனர்.

யானை என்பது புதிதல்ல ஏற்கனவே எல்லோரும் பார்த்த ஒரு மிருகம் தான். இருந்தாலும் அதை மீண்டும் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவது மனித இயல்பு. அதுவுமில்லாமல் அங்கே இருந்த மாணவர்களில் பல பேர் இதுவரை யானையைப் பார்த்ததில்லை போல் தெரிந்தது.

ஆசிரியர் பார்த்தார். இறைவனுடைய படைப்புகளில் இது பெரிய படைப்பு. இறைவனுடைய அற்புதங்களை இந்த இளம் மாணவர்கள் பார்ப்பதில் என்ன தவறு என்று நினைத்தார். "சரி வேண்டுமானால் எல்லோரும் போய் அந்த யானையைப் பார்த்துவிட்டு வாருங்கள்" என்று அனுமதி கொடுத்தார். எப்போது இப்படிச் சொல்வார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்த மாணவர்கள் உடனே எழுந்து ஓடினார்கள். எல்லோரும் வெளியே ஓடினார்கள். ஆனால் ஒரேயொரு மாணவன் மட்டும் தன்னிடத்தில் இருந்து அசையவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தான். ஆசிரியர் இதைப்பார்த்தார். அவருக்கு மிகவும் ஆச்சரியம். இப்படியும் ஒரு மாணவரா? என்று உடனே அந்த மாணவரைப் பார்த்துக்கேட்டார் "ஏனப்பா யானை பார்க்க நீ போகவில்லையா?" என்று. அதற்கு அந்த மாணவர் அமைதியாகப் பதில் கூறினார்."ஐயா நான் யானை பார்ப்பதற்காக பள்ளிக்கூடம் வரவில்லை" என்றான். இப்படிச் சொன்ன அந்த மாணவர் பிற்காலத்தில் யஷ்யா இப்னு யஹ்யா என்ற பெரியவர் ஆனார்.

இறைநேசச் செல்வர்கள் இளம் வயதில் எப்படி இருந்திருக்கின்றனர் பார்த்தீர்களா? இந்தக்காலத்தில் பிள்ளைகள் இப்படியாக இருக்கின்றனர்? ஒரு பையன் தனது அப்பாவிடம் வந்து "அப்பா நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி" என்றான். "ஏன் அப்படிச் சொல்கிறாய்" என்றார் அப்பா. "நீங்கள் இந்த வருஷம் எனக்காகப் புதிய புத்தகங்கள் வாங்க வேண்டியதில்லை இந்த வருஷமும் நான் அதே வகுப்பில் தான் இருக்கப் போகிறேன்" என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதில் பல்வேறு இடர்கள்

(யாழ்ப்பாணம்)

நேற்று இடம்பெற்ற 13வது நாடாளுமன்றத் தேர்தலுக்காக தூர இடங்களுக்கு தமது வாக்குகளை அளிககச்சென்ற இடம்பெயர்ந்த வடபகுதி வாக்காளர்கள் பல்வேறு இடைஞ்சல்களையும் எதிர் நோக்கியதாகக் கூறப்படுகிறது.

மேற்படி இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரால் இலவச பேருந்துச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவை பத்திரிகைகள் ஊடாகவும் விளம்பரப்படுத்தப்பட்டன.

இதை நம்பி வாக்காளர்கள் இதற்கென ஒதுக்கப்பட்ட பேருந்துகளில் பயணித்தபோது அவர்கள் அதிர்ச்சியடையும் வகையில் பயணக் கட்டணம் அறவிடப்பட்டதாகவும் இதனால் பயணத்துக்கு வேண்டியளவு பணத்தை எடுத்துச் செலலாத இடம்பெயர்ந்த வாக்காளர்கள் பெரிதும் அவதியுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, குறிக்கப்பபட்ட நேரத்திற்கு பேருந்துகள் புறப்படாமையால் அதிகநேரம் காத்திருக்க வேண்டிய நிலைக்கும் தாம் தள்ளப்பட்டதாகவும் சிலர் கால்நடையாக இருப்பிடங்களுக்குத் திரும்பியதாகவும் சம்பந்தப்பட்ட இடம்பெயாந்த வாக்காளாகள் கவலை தெரிவித்தனர். (உ-10)

# போராளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது குறித்து அறிவிப்பு

(கொழும்பு)

வனனியில் இருந்து திருமலை சம்பூருக்குச் செல்லவுள்ள விடுதலைபுலிகளின் போராளிகள் 150பேருக்கு உரிய பாதுகாப்பை இம் மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமைக்குப் பின்னர் வழங்க முடியும்என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளதாக இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின பேச்சாளர் அட்மிரல் பிரகறோஷ் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடததிற்கு அறிவித்துள்ளார்.

கருணாவை விடுதலைப் புலிகள இயக்கத்திலிருந்து புலிகளின் தலைமைப் பீடம் விலக்கியதையடுத்து எழுந்துள்ள நிலைமை காரணமாக 150விடுதலைப்புலிகளின் போராளிகளை வன்னியில் இருந்து திருகோணமலை சம்பூருக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கு இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலமாக இலங்கை இராணுவததைக் கேட்டுக் கொண்டதை அடுத்தே மேற்கண்டவாறு அட்மிரல் பிரகரோஷ் அறிவித்துள்ளார். (ம)

## இராசி பலன்

**03.04.2004**

**(பங்குனி 21, சனிக்கிழமை)**
**திரயோதசி முன்னிரவு 7.32 வரை**
**பூரம் முன்னிரவு 8.13 வரை**
**இராகுகாலம் 9.10-10.40 வரை**
**சுபநேரம் 3.10-4.40 வரை**
**சனிப்பிரதோச விரதம்**

**மேடம்**
அதிக பிரயாசை, எதிர்பாராத செலவு, பிறருக்கு உதவுதல், சிறு வியாதி.

**இடபம்**
மனச்சோர்வு, முயற்சி தாமதம், தொழிலில் ஆர்வம், சிந்தனை மிகுதி.

**மிதுனம்**
பிரயாணம், தனலாபம், உறவினர் வருகை, புதிய விடயம்.

**கடகம்**
அதிகாரம், நிலைமாற்றம், காரியதாமதம், வாய்த்தர்க்கம்.

**சிங்கம்**
பெரியோர் மனஸ்தாபம், விருந்துபசாரம், எதிர் பாராத நன்மை, முயற்சி கைகூடும்.

**கன்னி**
அமைதிக் குறைவு, பணத்தட்டுப்பாடு, முயற்சி தாமதம், பிரயாணம்.

**துலாம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் நன்மை, போசன சுகம், தனலாபம்.

**விருச்சிகம்**
பிறர் உதவி, தொழிலில் ஆர்வம், காரிய சித்தி, புதிய விடயம்.

**தனுசு**
பிரயாணம், பிதா சிந்தை, நல்ல முயற்சி, தனவிரயம்.

**மகரம்**
சகோதரர் உதவி, வீண் பகை, காரிய தடங்கல், ரோக நிலை.

**கும்பம்**
நல்ல வரவேற்பு, குடும்ப நலம், காரிய சித்தி, தனவரவு.

**மீனம்**
நோய் குணமடைதல், போசன சுகம், நல்ல பிரயாசை, உற்சாகம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**வளவன்**

# வாக்களிப்பு நிலையம் முன் கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யா/கனகரத்தினம் மகா வித்தியாலயததிற்கு முன்பாக கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு இராணுவத்தின் வெடிபொருள் அகற்றும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

தேர்தல் தினத்திற்கு முதல் நாளான நேற்று முன் தினம் காலை வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்த போதே இக் கைக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டதாகவும் உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இராணுவத்தினர் அதனைச் செயலிழக்கச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் வாக்களிப்பு நிலையமான மேற்படி பாடசாலையில் நேற்று இயல்பாக வாக்களிப்பு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

# வாக்களிக்கும் உரிமையை பல்கலை நிர்வாகம் பறித்தது

## பல்கலை மாணவர்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு யாழ். பல்கலைக்கழகம் விடுமுறை வழங்கவில்லை என அங்கு கல்வி கற்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 31ஆம் திகதி அன்று செய்யப்பட்ட அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இருப்பினும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாக்களிக்க பல்கலைக்கழக நிர்வாகம் எதுவிதமான ஏற்பாட்டினையும் மேற்கொள்ளவில்லை.

தேர்தலை ஒட்டி மாணவர்கள் தத்தம் சொந்தப் பிரதேசங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கு ஏற்ற விதமாக விடுமுறையும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக எமது வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்று வரை விரிவுரைகளும் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. திட்டமிட்ட ரீதியில் யாழ். பல்கலைக்கழகம் எமது வாக்குரிமையைப் பறித்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# பணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கண்டி வீதியில் உள்ள சாவகச்சேரி பஸ் நிலையம அருகாமையில் , இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் சாரதி ஒருவரால் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு யாழ். போக்குவரத்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பணத்தை தவறவிட்டவர்கள் யாழ். பொலிஸ் நிலையம் வந்து தகுந்த வகையில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்ப்பாண போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-3)

# இலக்கத்தகடு விநியோகம்

(நவாலி)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மருதனார் மடம். அலுவலகத்தில் 2004 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி இலக்கத்தகடுகள் வழங்கப்படுகின்றன.

இவ்வருடத்திற்கான துவிச்சக்கரவண்டி இலக்கத்தகடுகளைப் பெறவிரும்புவோர் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-102)

# தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த சதாவதானி கதிரவேற்பிள்ளை

செந்தமிழையும் சைவத்தினையும் போற்றி வளர்த்தவர்களின் வரிசையில் தனக்கெனவோர் தனியிடம் வகித்தவர் மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளையவர்கள் என்றால மிகையாகாது. "செந்தமிழணங்கின் சிந்தையிலென்றுந் தங்கும் தமிழ்மொழித் துங்கவன்" எனறு போற்றப்பட்ட சதாவதானி பெருமகனாரின் 97 ஆவது குருபூசைத் தினம் இன்றாகும். சதாவதானி கதிரவேற்பிள்ளை புலவர் ஒலி எழுந்தமையால் புலோலி எனப் பெயர் பெற்ற மேலைப்புலோலியில் நாகப்பிள்ளை சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு 1871 ஆம் வருடம் மார்கழித் திங்கள மூன்றாம் நாள் புத்திரராக அவதரிதது, செந்தமிழும் சைவமும் சிறக்க மாபெரும் பணிகள் ஆற்றி 1907ஆம் வருடம் பங்குனித் திங்கள் 13ஆம் நாள் சிவப்பேறு எய்தினார்.

### தமிழினத்திற்குப் புகழ்தரும் பெருமகனார் சேவை

தமது 36 வருட பூவுலக வாழ்வில் பெருமகனார் ஆற்றிய பணிகளினால் செந்தமிழும், சைவமும் சிறப்புற ஆதாரமாகத் திகழ்ந்தமை மிகவும் பாராட்டுக்குரியவை மட்டுமல்ல தமிழினத் திற்கே பெருமை சேர்ப்பனவாகும்.

ஆரம்பக் கல்வியை மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்று, படிப்பில் மகா விவேகியாகவும் அதிலே தளராத விருப்பும் அளப்பரிய ஆற்றலும் வாய்ந்த பிள்ளையவர்கள், மேலும் பல நூல்களை ஐயந்திரிபுறப் பெரியார் வாய்க் கேடடறிதல் வேண்டும் என்ற பெருவிருப்பில் தமது 22ஆவது வயதில் தமிழ்நாடு சென்றார். தமிழ் நாட்டிலே பல வித்துவான்களிடம் பாடங்கேட்டு செந்தமிழ் இலக்கணத்தையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் நுணுகி ஆராய்வதற்கு இன்றியமையாத வடமொழியையும் கற்று ஆழ்ந்த புலமை எய்தினார்.

உயர்நிலைப் பள்ளிகளில் சில காலம் ஆசிரியப் பணிபுரிந்த பிள்ளையவர்கள் அதன் பின்பு நூல்களுக்கு உரையெழுதுவதிலும் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபடுபவராயினர். சிவசேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசிப் புராண அரும்பதவுரை, திரு ஞானசம்பந்தமூர்த்தி வரலாறு முதலிய நூல்கள் அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தன. இவற்றைவிட பழனித்தலபுராணம், திருவருணைக்கலம்பகம், சிவராத்திரிப் புராணம் முதலியவற்றுக்கும் தெளிவான விருத்தியுரை எழுதினார. பெருமகனார் அதிவரராம பாண்டியன் இயற்றிய தமிழ்க் கூர்ம புராணத்துக்கும் அரியதோருரை எழுதியுள்ளார். புலவர்ககு ஒளடதமெனப் போற்றப்படும் நைடதத்துக்கு ஓர் ஆராயச்சியுரை எழுதிய பெருமகனாரின் புலமையைப் பாராட்டாதவர்கள் இல்லை.

### பட்டங்கள் பல பெற்றார்

பெருமகனாரின் செந்தமிழ், சைவப் பணிகளுக்குத் தமிழ் நாட்டில் சைவத் தமிழன்பர்களினால் பல விருதுகளும் பட்டங்களும் உவந்தளிக்கப்பட்டன. சைவசித்தாந்த மகாசரபம், அத்துவித சிததாந்த மகோத்தாரணர், மகாவித்துவான், நாவலர், பெருஞ் சொற் கொண்டல் போன்ற சிறந்த பட்டங்கள் பெருமகனாரின் பெயரை மொய்த்தன.

பெருமகனாரினால் தொடுக்கப்பட்ட அகராதி "தமிழ்மொழியகராதி" என்னும் பெயரில் 1698 பக்கங்களுடன் பதிப்பிக்கப் பெற்றமை அவருக்கு இமாலயப் புகழை ஈட்டிக்கொடுத் தது. இவ் அகராதியில் பெருமகனார் பரதசேனாபதீயம், இசை நுணுக்கம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, அன்பிணைந்திணை, கல்லாடம், தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு, இலக்கணவிளக்கம், வீரசோழியம், புராணங்கள், இதிகாசங்கள், சூளாமணி, புறப் பொருள் வெண்பாமாலை, சித்தாந்த சாத்திரம், பிங்கலநதை, திவாகரம் முதலிய அரியபெரிய நூலகளினின்றுந் சொற்களையும், தொகைப் பொருள்களையும், செந்தமிழ் நாட்டு வழக்க மொழிகள் பலவற்றையும் சேர்த்து சிறப்பாகத் தொகுத்துள்ளமை பெருமகனாரின் பேராற்றலை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றமை உண்மை.

### சைவத்திற்கும் தமிழுக்கும் அரும் பணியாற்றினார்

அறிவாற்றல் நிரம்பிய புலவர்களால் அக்காலத்து வழக்கமாயிருந்தது அட்டாவதானம் அல்லது சதாவதானம் செய்து தமது ஆற்றலை வெளிப்படுத்துவது. பெருமகனார் 1907ஆம் வருடம் மாசி மாதம் 24 ஆம் நாள் சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் சதாவதானம் செய்து "சதாவதானம் கதிரவேற்பிள்ளை" எனப் பெயர் பெற்றார்.

செந்தமிழுக்கும், சைவசமயத்திற்கும் அரும்பணியாற்றிய பெருமகனார் தமது முப்பத்தியாறாவது அகவையில் பிராபவ வருடம் பங்குனிமாதம் 13 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மக நட்சத்திரம் கூடிய துவாதசித் திதியிலே சிவப்பேறு எய்தினார்.

பெருமகனாரின் நினைவாக மேலைப் புலோலியில் அமைந்துள்ள சனசமூக நிலையம் அவரை நினைவு கூர்ந்து குருபூசைத்தின நிகழ்வு, வருடாந்த நினைவிழா நிகழ்வுகளுடன் கல்வியையும், செந்தமிழையும் மேம்படுத்துவதன பொருட்டு குருபூசைத்தினப் பேச்சு, மனனம், பண்ணிசைப் போட்டிகளைப் பரந்தளவில் பாடசாலை மாணவர்களிடையே நடாத்துவதுடன், நூலக சேவை, சமூகசேவைகளில் ஈடுபட்டு வருவது பெருமகனாரின் நினைவாக ஆற்றப்படும் மகத்தான வெளிப்பாடு மட்டு மல்ல அக்கிராம மக்களின் பண்பாட்டினையும் வெளிபபடுத்தி நிற்பது உண்மை. □

தொகுப்பு
அம்பலவாணர் துரைசிங்கம்

# பா.ஜ.கவின் தொலைநோக்கு ஆவணம் காங்கிரஸ் தி.மு.க. கண்டனம்

(சென்னை)

பா.ஜ.க வெளியிட்ட தொலைநோக்கு ஆவணம் பற்றி காங்கிரஸ கட்சியும், தி.மு.கவும் குறை கூறியுள்ளன.

இந்த ஆவணத்தில் ஆர்.எஸ். எஸ். தலைவர்களோடு தேசியத்தலைவர்களாக மகாத்மாகாந்தி, ஜெயபபிரகாஷ் நாராயணன், டாக்டர் அமபேத்கார் ஆகியோரை இணைததிருப்பது அந்தத் தேசியத் தலைவாகளுககு இழுக்குச் சேர்ப்பதாகும என்று காங்கிரஸ் கட்சி குறை கூறியிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். கட்சி, இந்தத் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்டதைப் பிரித்தெடுத்து வெளியிட்டிருப்பது முறையற்றது என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கபில்சிவல் புதுடிலலியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

"இந்தியா ஒளிர்கிறது" என்ற விளம்பரத்தை வெளியிடும்படி மத்திய அரசு அமைச்சகங்களுக்கு பிரதமர் அலுவலகம்தான் உத்தர விட்டது என்றும், மக்கள் வரிப் பணம் இதற்குத் தவறாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது என்றும் கூறிய கபில் சிவல், இதுபற்றி சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட வேண்டுமென்றார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில்,தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் எதிாக்கும் அம்சங்களைச் சேர்ப்பதற்காகவே பா.ஜ.க. தொலை நோக்கு ஆவணத்தைத்தனியாக வெளியிட்டது எனக் கூறியிருக்கிறார்.

தி.மு.க, பா.ம.க,மதிமுக போன்ற கட்சிகள் கூட்டணியில் இருந்த சமயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருநத இராமர் கோவில், பொதுவான சிவில் சட்டம், மதமாற்றத் தடைச் சட்டம் ஆகிய சர்ச்சைக்குரிய அம்சங்களை அந்தக் கட்சிகள் வெளியேறியதும் பா.ஜ.க. தொலை நோக்கு ஆவணத்தில் சேர்த்துக் கொண்டுள்ளது என்று கருணாநிதி அந்த அறிககையில் குற்றஞ் சாட்டியிருக்கிறார். (து)

# இந்தியா வல்லரசாகத் திகழ தே. ஐ. மு. யை ஆதரியுங்கள்

(சென்னை)

மக்களவைத் தேர்தல் பிரசாரம் சென்னை நகரில் நேற்று முன்தினம் மேலும் விறுவிறுப்படைந்தது.

பா.ஜ.கவின் அகில இந்தியத் தலைவர் வெஙகையநாயுடு வட சென்னைத் தொகுதி உடுக்குப் பேட்டையில் தமது கட்சியின் வேட்பாளர் சுகுமாரன் நம்பியாரை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம் செய்தார்.

தேசிய ஜன நாயகக் கூட்டணிக்குச் சிறந்த தலைவர், தெளிவான தொலைநோக்கு, ஒற்றுமை, நம்பிக்கை உள்ளது. ஆனால் எதிரணிக்கோயார் பிரதமர் எனறு குறிப்பிட முடியாத குழப்ப நிலை உள்ளது என்று குறிப்பிட்டார்.

வாஜபாய் தலைமையில் இந்தியா உலகப் புகழ் பெற்றுள்ளது என்று கூறிய அவர், இந்தியா வலுமிக்க வல்லரசாகத் திகழ்வதற்கு தேசிய ஜனநாயக முன்னணியை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டார். (து)

இந்தியச் செய்திகள்

# 2020 இல் இந்தியா வல்லரசாகும் வெங்கைய நாயுடு அறிவிப்பு

(சென்னை)

இந்தியாவை வலிமை வாய்ந்த நாடாக உருவாக்குவதை முன்னிலைப்படுத்தி மக்களவைத் தேர்தலில் பிரசாரம் மேற்கொள்ளப்படுமென்று பா.ஜ.க. அகில இந்தியத் தலைவர் வெங்கையநாயுடு கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் பிரசாரத்தின் போது பொருளாதார விஷயங்கள், மற்றும் இந்தியாவை வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் வல்லரசாக உருவாக்குவது போன்ற விஷயங்களில் பா.ஜ.க. அதிக அக்கறை காட்டும் என்று கூறினார்.

இந்தியா வளர்ந்த நாடாக 2020 ஆம் ஆண்டுக்குள் உருவாக்கப்படும் என்று பா.ஜ.க. தொலை நோக்கு ஆவணத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.ஆனால் ஏற்கனவே இந்தியா சக்தி வாய்ந்த நாடாக மாறிவிட்டது.நடப்பு நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி 10.3 சதவீதமாக வளர்ந்து விட்டது என்றும் அவர் கூறினார்.

இந்த வளர்ச்சி விகிதம் அடுத்த 5 ஆண்டுகளுக்குத் தொடர்வதை பா.ஜ.க. உறுதி செய்யும் என்று கூறிய வெஙகைய நாயுடு, இந்த ஆண்டு சீனாவின் வளர்ச்சி விகிதத்தை விட இந்தியாவின் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருப்பதாகத் தெரிவித்தா.

வாஜபாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மீண்டும் ஆட்சிக்கு வருவது உறுதி என்று அவர் கூறினார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், அரசியல் சாசன உயர் பதவிகளை இந்தியாவில் பிறந்தவர்களே வகிக்க வேண்டும் என்பது தான் பா.ஜ.கவின் நிலை என்று கூறினார்.

வாய்ப்புக கிடைக்கும் பட்சத்தில் இது குறித்துச் சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வெங்கைய நாயுடு தெரிவித்தார். (து)

# சோனியா -சரத்பவார் இணைப்பு குறித்து வாஜ்பாய் வியப்பு

(ஜெனகர்)

வெளிநாட்டில் பிறந்த காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உயர்பதவிகளை வகிக்கலாமா என்று எழுந்துள்ள பிரச்சினை அமைதியான முறையில் விவாதிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் வாஜபாய் கூறியிருக்கிறார்.

மகாராஷ்ட்ர மாநிலத்து பழங்குடியின மக்கள் கணிசமாக வாழும் ஜெனகர் என்னும் இடத்தில் தேர்தல் பிராசாரக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் சோனியாகாந்தியும் தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத்பவாரும் சாலையோர தேர்தல் பிரசாரத்தை இணைந்து துவங்கியிருப்பது பற்றி தனது வியப்பைத் தெரிவித்தார்.

சோனியா காந்தியின் வெளிநாட்டுப் பிறப்பினை பெரியதொரு பிரச்சினையாக்கி காங்கிரஸ் கட்சியல் இருந்து வெளியேறிய தேசியவாதக் காங்கிரஸ் தற்போது காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருப்பது நகைப்பிற்குரியது என்றும் இவ்விரு கட்சிகளின் தலைவர்களும் முட்டாள் தினம் என்று அழைக்கப் படுகின்ற ஏப்ரல் முதல் திகதியன்று இணைந்து பிரசாரத்தை துவங்கியிருப்பது தவிாத்திருக்க வேண்டும் என்றும் வாஜபாய் கூறினார். (து)

# ஆர். எஸ். எஸ். இன் இரட்டை வேடம்

(சென்னை)

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆர். எஸ்.எஸ். என்றுமே ஈடுபட்டதில்லை என்று மார்க்ஸிஸ்ட் கம்பியூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீதாராம் யசூசி குற்றம் சாட்டியிருக்கிறார்.

மகாத்மாகாந்தி 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடத்தியபோது அதிலிருந்து ஆர். எஸ். எஸ். ஒதுங்கியிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் சட்டத்திற்கு உட்பட்டு நடந்துகொண்டது.இந்த விபரம் மும்பே உள் துறை ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் யசூசி மேலும் தெரிவித்துள்ளார் (து)

# வங்கி மோசடி வழக்கிலிருந்து காளிமுத்துவை விடுவித்தது செல்லாது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

பல்வேறு வங்கிகளில் பண மோசடி செய்ததாக ராவின் மெயின் மீதும் அவருக்கு உடந்தையாக இருந்தாக, தற்போதைய சபாநாயகரும் முன்னாள் அமைச்சருமான காளிமுத்து மீதும் சி.பி.ஐ தொடர்ந்த வழக்கில் இருந்து காளிமுத்துவை விடுவித்து சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு செல்லுபடியாகாது என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

வங்கி மோசடி வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கக்கோரி காளிமுத்து தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்ட சென்னையிலுள்ள சிறப்பு சி.பி.ஐ நீதிமன்றம் கடந்த டிசம்பர் மாதம் அவரை விடுவித்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி சி.பி.ஐ தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.அசோக்குமா வழங்கிலிருந்து காளிமுத்துவை விடுவித்தது செல்லது என்று தெரிவித்தார்.

அடுத்த மாதம் 16ஆம் தேதிக்குள் சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் சபாநாயகர் காளிமுத்து ஆஜராகி வழக்கைத் தொடர்ந்து சந்திக்க வேண்டுமென்று நீதிபதி அத் தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

1983,1984ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் காளிமுத்து அமைச்சராக இருந்தபோது இந்த வழக்குத் தொடரப்பட்டது. (து)

# தென்னாபிரிக்க ஹரி கேஸ்டன் கிரிக்கெற்றிலிருந்து ஓய்வு

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான ஹரி கேஸ்டன், இவவாரம் முடிவுற்ற தென்னாபிரிக்க நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டித் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியுடன் ஒய்வுபெற்றுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற ஹரி கேஸ்டன் (வயது 37) தென்னாபிரிக்க கிரிக்கெற் அணிசார்பாக 1993/94 காலப்பகுதியில் மெல்போனில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

101டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 176இனிங்ஸில் விளையாடி 7ஆயிரத்து 289ஓட்டங்களைப் பெற்றுளள கேஸ்டன் 275ஓட்டங்களை அதிகூடிய ஓட்டமாகப் பெற்றுள்ளதோடு 21சதங்களையும், 34அரைச்சதங்களையும் பெற்றுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் இவரது ஓட்டசராசரி 45.27ஆக அமைந்துள்ளது. அத்துடன், களத்தடுப்பில கேஸ்டன் 83பிடிகளையும், பந்துவீச்சில் 2விக்கெற்றினையும் வீழ்த்தியுள்ளார்.

இவரைப்பற்றி குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் டெஸ்ட் அந்தஸ்துப்பெற்ற ஏனைய நாடுகளுடன் விளையாடி ஒவ்வொரு நாட்டுக்கு எதிராகவும் சதம் பெற்றுள்ளமையாகும்.

அத்துடன், கேஸ்டன் பங்கு பற்றிய கடைசி டெஸ்ட் போட்டியில் 76 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

185ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய கேஸ்டன் 6 ஆயிரத்து 798ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவரது அதிகூடிய ஓட்டமாக 188ஓட்டங்கள் காணப்படுகின்றன. அத்துடன், 13சதங்களையும், 45அரைச்சதங்களையும் பெற்றுள்ள கேஸ்டன் 40.95ஓட்ட சராசரியாகக் கொண்டுள்ளார். மற்றும் 61 பிடிகளையும் எடுத்துள்ளார். விக்கெற் காப்பாளராக சிலகாலம் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(யே-121)

# வர்ணனையாளர் ரோனி முரளிதரனுக்குப் புகழாரம்

இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளாரான முத்தையா முரளிதரன் வீசும், தூஸ்ரா என்ற புதிய வகைப் பந்துவீச்சு கிரிக்கெற்றுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் என பிரபல வர்ணனையாளர் ரோனி கிறெய்க் தெரிவித்துள்ளாா.

முரளிதரன் பந்தை வீசி எறிகின்றார் என்ற குற்றச்சாட்டுபற்றி ரோனி கிறெய்க் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய நடுவரான றோஸ் எமர்ஸன், முரளி பற்றிக் கூறிய கருத்துக்களை பொருட்படுத்த வேணடிய அவசியமில்லை எனவும், சர்ச்சைகள மூலம் பிரபல்யப்பட்டுக் கொள்வதற்காகவே இந்தக் கருத்துக்களை அவர் கூறுகின்றார் என்றும் ரோனி கிறெய்க் கூறினார்.

இதுவரை 513டெஸ்ட் விக்கெற்றுக்களைப்பெற்று மொத்த டெஸ்ட் விக்கெற்றுகளுக்கான உலக சாதனையின் விழிப்பில் இருக்கின்ற போது இவ்வாறான குற்றச்சாட்டைச சுமத்தியிருப்பது கவலை தருவதாக ரோனி கூறினார். இதன் மூலம் கிரிக்கெற் நிர்வாகத்துறையின நிலமை வெளிச்சமாவதாகவும் அவர் தெரிவித்தார்.

(யே-121)

# உதைபந்தாட்ட சம்மேளன ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தெரிவு

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை சம்மேளனப் பணிமனையில் அதன் தலைவர் எஸ்.காமினி ரந்தெனிய தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இடம்பெற்ற நட்ப்பு வருடத்திற்கான ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவின் போது கீழ்க்காண்போர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ்.காமினி ரந்தெனிய, உபதலைவர்கள் திலின பண்டிதரத்ன, கோ்லி சில்வேரா, ரியர் அட்மிரல, சனத் வீரசேகர, வணபிதா கிரான்வில் பெரேரா, திருமதி லெரின் பெரேரா, கௌரவ செயலாளர் சுனில் சேனவீர, உதவிச செயலாளர்கள் (நிர்வாகம்) பி.எச்சலே, (தொழில்நுட்பம்) எஸ்கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, தனாதிகாரி-ரஞ்சித் றொட்ரிகோ, உதவித் தனாதிகாரி எம்.எம்.ரமீஸ்.

இதேவேளள, ஆட்சிக்குழு உறுப்பினராக பெண் நடுவர் ஒருவர் தெரிவு செய் யப்பட்டமை உதைபந்தாட்ட வரலாறறில் இதுவே முதற்தடவையாகும்.

(உ-110)

# 224 ஓட்டங்களுக்கு மே.இ.தீவுகள் சகல விக்கெற்றையும் இழந்தது

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் பார்படோவில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெற போட்டியின் முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது இங்கிலாந்து அணி ஒரு விக்கெற் இழப்பிற்கு 28 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 224ஓட்டங்களைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டததில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் ராம்நரேஸ் சர்வான் 63ஓட்டங்களையும், சிவ்நாறின் சந்தர்ப்போல் 50ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை எதிர்நோக்க முடியாத மேற்கிநதிய தீவுகள் அணியின் ஏனைய முக்கிய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் விக்கெற்றுக்களை இங்கிலாந்து அணிக்குத் தாரை வார்த்தனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணிசார்பில் அன்ரூ பிளின்ரோல் 5விக்கெற்றினையும், ஹாமிஸன் 3விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

(யே-121)

# தெற்காசிய விளையாட்டில் இலங்கைக்கு 24பதக்கங்கள்!

தற்பொழுது பாகிஸ்தானில்நடைபெற்றுவரும் ஒன்பதாவது தெற்காசிய விளையாட்டுவிழாவில் இலங்கை இதுவரை 24பதக்கங்களைப் பெற்றுள்ளது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஒரு தங்கம், 11வெள்ளி, 12 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 24பதக்கங்களை இலங்கை கைப்பற்றி நான்காவது இடத்திலேயுள்ளது.

பதக்கப்பட்டியல் வரிசையில் இந்தியா முதலாமிடத்திலும், போட்டிகளை நடாத்தும் பாகிஸ்தான் இரண்டாவது இடத்திலும், பங்களாதேஷ் மூன்றாவது இடத்திலுமிருக்கின்றன.

மெய்வல்லுநர் போட்டிகளில் இலஙகையின் ஆண்,பெண் இருபாலாரும் கூடுதல பதக்கங்கள் வெல்வர் எனறும் அதிகமான தங்கப்பதக்கங்கள் இப்பரிவிலேயே பெறப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(யே)

# சிம்பாப்வேக்கான இலங்கை அணி

இந்தமாதம் கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சிம்பாப்வே செல்லவுள்ள இலங்கை அணி தெரிவு வெகுவிரைவில் இடம்பெறவுள்ளது.

அதற்கு முன்னோடியாக தற்போது 22வீரர்கள் பயிற்சிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாவன் அத்தபத்து, சனத் ஜெயசூரியா, குமார் சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்ஷான், திவான் சமரவீர, ரசல் ஆர்நோல்ட், உப்புள் சந்தன, சமிந்தவாஸ், நுவான சொய்சா, பில்கார பெர்ணாண்டோ, முத்தையா முரளிதரன், சமன்ஜெயந்த, நுவான் குலசேகர, ரங்கன ஹேரத், திலன் கந்தம்பி, பா்வேஸ் மஹரூவ், பிரசன்ன ஜெயவர்த்தன, இயன்டானியல்,அவிஷ குணவர்த்தன, சமில் ஹம்கே, கௌசல்ய லொக்குஆராய்ச்சி ஆகியோா இலங்கை கிரிக்கெற்சபை வெளியிட்டுள்ள 22பேரில் உள்ளடங்குகின்றனர். இலங்கையில் இருந்து தான் சிம்பாப்வே சுற்றுப்பயணத்திற்கான வீரர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

(யே-121)

# விளையாட்டுச் செய்திகள்

## அவுஸ்திரேலிய நீச்சல் முடிவுகள்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகின்ற அவுஸ்திரேலிய தேசிய சம்பியன் ஷிப் கிண்ண மற்றும் ஒலிம்பிக் தெரிவுக் குழுவின் ஆண்களுக்கான 100மீற்றர் நீச்சல் போட்டியில் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் பெற்ற இயன்தோர்ப் வெற்றி பெற்றிருக்கின்றார். இயன் தோர்ப் இந்தத் தூரத்தை 48.83வினாடிகளில் நீந்தி முடித்திருக்கின்றார். 49.31விநாடிகளில் நீந்திய அஸ்லி கொலஸ் இரண்டாம் இடத்தையும், 50.08விநாடிகளில் நீந்திய டொட் வியர்சன் 3ஆம் இடத்தையும் பெற்றிருக்கின்றார்கள்.

200மீற்றர் நீச்சல் போட்டியில் ஜிம்பொயிற்றர் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறார். பெண்களுக்கான 200மீற்றர் நீச்சல் போட்டியில் பற்றியாதோமஸ் வெற்றிபெற்றிருக்கின்றார். இவர் இந்தத் தூரத்தை 2 நிமிடங்கள் 6.79விநாடிகளில் நீந்தி முடித்தமை குறிப்பிடத்தக்கது.

### உலக சாதனை

பெண்களுக்கான 100மீற்றர் இலகுமுறை நீச்சல் போட்டியில் றிஸ்பிக் கிளின்ரன் 53.66 செக்கன் களில் நீந்திமுடித்து புதிய உலக சாதனையைப் படைத்திருக்கின்றார். இவருக்கு முன்னர் 2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் நெதர்லாந்து வீராங்கனை 53.77செக்கன்களில் 100 மீற்றர் இலகு நீச்சலில் உலக சாதனை படைத்திருந்தார்.

(யே-121)

## சக்லெய்ன் நீக்கப்பட்டார்

இந்திய பாகிதான் அணிகளுக்கிடையில் அடுத்து வருகின்ற டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளா சக்லெய்ன் முஸ்தாக் நீக்கப்பட்டுள்ளார்.

முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் பந்துவீச்சில் அதிக ஓட்டங்களை அள்ளி வழங்கியதனால் அவர் நீக்கப்பட்டு இருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெற்சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, தவறான ஆட்டமிழப்பு ஒன்றை தீர்ப்பளித்த நடுவரையும், பந்துவீசிய இர்பான் பதானையும் ஆவேசமாக பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தான் அணியின துடுப்பாட்ட வீரரும், விக்கெற் காப்பாளருமான றொய்ன் கானின் போட்டி ஊதியத்தில் 75 வீதம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

(யே-121)


# உதை விளையாட்டு வலம்



எதென்சில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு தான் தயாராக இருப்பதாக பிரித்தானியாவின் மெய்வல்லுநர் வீராங்கனையான ஷெரின் நொக் பத்திரிகையாளர்களுக்கு அறிவித்தார்.



பிரித்தானிய உதைபந்தாட்ட அணியை 1:0என்ற அடிப்படையில் அண்மையில் வெற்றிகொண்ட சுவீடன் அணியின் வீரர்கள் மகிழ்ச்சி கொண்டாடுவதைப் படத்தில் காண்கிறீர்கள்.




மேற்கிந்தியத் தீவுகளின் துறைமுகம் ஒன்றில் நிறுத்தப்பட்டிருக்கும் போர்க் கப்பலில் பொருத்தப்பட்டிருக்கும் விமான எதிர்ப்புப் பீரங்கி அருகில் இங்கிலாந்து அணியின் கிரிக்கெற் வீரர்கள் அமர்ந்திருக்கின்றனர்.



இந்திய அணியின் டெஸ்ட் வெற்றிக்கு காரணமான இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரும் வீரேந்தர் ஷேவாக்கும் மைதானத்தில் ஆட்டநேரத்தின் போது காணப்படுகின்றனர்.

கேடறியாக் கெட்டவிடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. -குறள்

வலம்புரி

## நிலையான ஆட்சியும் நிரந்தரத் தீர்வும் ஏற்படட்டும்

13 வது பாராளுமன்ற தேர்தல் நேற்றைய தினம் நடந்து முடிந்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் மிகப் பெரியதொரு தேர்தல் வன்முறை நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. குமார் ரூபசிங்க போன்றவர்கள் மிகப்பெரும் தேர்தல் வன்முறை வெடிக்கும் என எதிர்வு கூறியிருந்தனர். ஆனால் வழமைக்கு மாறாக இம்முறை தேர்தலில் தென்னிலங்கையில் ஏற்பட்ட வன்முறைகள் கடந்த கால தேர்தல்களோடு ஒப்பிடும்போது மிகக் குறைவென்றே கூறவேண்டும்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக தேர்தல் ஆணையாளரின் சில இறுக்கமான அறிவிப்புக்கள், பாதுகாப்பு அமைச்சைத் தனது அதிகாரத்தின்கீழ் வைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்புப் படையினருக்கு விடுத்த கண்டிப்பான உத்தரவு மற்றும் சர்வதேச கண்காணிப்புக் குழுக்களின் அவதானிப்பு போன்றவை காரணமாகவே தேர்தல் வன்முறைகள் குறைவடைந்ததெனக் கூறலாம்.

இதற்கு மேலாக வன்முறைச் சம்பவங்களுக்கு மக்கள் காட்டிய எதிர்ப்பும் தேர்தல் வன்முறைகளின் வீழ்ச்சிக்குக் காரணமெனலாம். வழமையில் தேர்தல் வன்முறைகளை அரசியல்வாதிகள் ஆரம்பித்து வைக்க அதனை நீட்டி நிமிர்த்தி முடித்து வைக்கும் பொறுப்பை பொதுமக்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால், இம்முறை அரசியல்வாதிகளின் எடுபாடுகளுக்கு மக்கள் இடம்கொடுக்காததன் காரணமாக தென்னிலங்கையில் தேர்தல் வன்முறைகள் குறைவடைந்துள்ளது எனலாம்.

இலங்கை என்ற சிறிய நாடு அடிக்கடி தேர்தலைச் சந்திப்பது அந்நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தினாலும், சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனமாற்றத்தை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அதாவது, ஒரு காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான போக்கைக் கொண்டிருந்த சிங்கள மக்கள் இப்போது அத்தகையதோர் முடிவுகளில் இருந்து விலகி தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும்போதே நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படமுடியும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாகவே இனவாதத்தைப் பேசி வந்த அரசியல்கட்சிகள் தமது கொள்கைகளை மாற்றி இனப்பிரச்சினைத் தீர்வு-தமிழ்மக்களின் உரிமை-விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற சிந்தனைகளில் தம்மை வழிப்படுத்தியுள்ளனர்.

இதனாலேயே, சமாதானத்தை வலியுறுத்தி இரு பிரதான கட்சிகளும் தமது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன. எதுவாயினும் 13ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. யார் ஆட்சியமைப்பார்கள் என்பது தெரியாத விடயமாயினும், ஆட்சியமைக்கப்போகின்றவர்களுக்குப் பாரிய பொறுப்பு உண்டென்பது இங்கு நோக்குதற்குரியது.

யார் ஆட்சியமைத்தாலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது அவர்களின் தலையாய கடமையாகும். இப்போதெல்லாம் மக்கள் அரசியல்வாதிகளைப் புரிந்துகொண்டுவிட்டனர். சொல்வதொன்று செய்வதொன்றாக ஆட்சியாளர்கள் நடந்துகொள்வார்களாயின் அதனை மக்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள். அதற்குரிய பதிலடியை அடுத்த தேர்தலில் வழங்குவதற்கு மக்கள் தயாராகிவிட்டனர். எனவே, எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும், அவை தாம் தேர்தல் பிரசாரங்களில் கூறிய' வார்த்தைகளை-தேர்தல் விஞ்ஞாபனங்களை மறக்காமல் இருந்தால் அதுபோதுமானதாகும்.

தற்போது நாட்டு மக்கள் முக்கியமாக எதிர்பார்ப்பது நிலையான ஆட்சியும், நிரந்தரத் தீர்வுமாகும். அதாவது யார் ஆட்சியமைத்தாலும் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும்.

குறிப்பாக விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை முன்னெடுத்து ஓர் சமாதானத் தீர்வை ஏற்படுத்தவேண்டும்.

# துக்கத்தின் வடிகாலாகும் கண்ணீர் கண்களின் நலத்தையும் காக்கிறது

S. யசோதா

"கண்ணீர் துளிகள்.
சோம்பிவழியும் சொட்டுகள்;
அவை சொல்லும் பொருளை
அறியேனே"

என்று ஆங்கில அரசவைக் கவிஞரான டென்னிசன் எழுதினார். அச்சமயத்தில் கண்ணீரின் பணியைப் பற்றி மக்கள் அதிகமாக அறிந்திருக்கவில்லை. ஆனால் கண்ணீரைப்பற்றிச் செய்யப்பட்ட தீவிர ஆராய்ச்சிகள் சில, அரிய ஆர்வமூட்டும் உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கின்றன.

### கண்ணீர் எங்கு உற்பத்தியாகிறது?

நாம் அழும்போது கண்ணீர் தாரை தாரையாக வடிகிறது என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் எப்பொழுதுமே கண்களைக் கண்ணீர்த் துளிப்படலம் மூடிய வண்ணம் இருக்கிறது என்பது நம்மில் அநேகருக்குத் தெரியாத ஒன்றாகும். கண்ணீர்விட்டு விட்டு வந்தாலும், தொடர்ந்து கண்ணின் விழிகளை மூடியபடி இருந்தாலும் அது கண்ணின் நின்று வெளியேறவில்லை என்பதை நாம் அறியவேண்டும். கண்ணின் கடையோரத்திலுள்ள சின்னஞ் சிறு சுரப்பிகளே கண்ணீரைச் சுரந்து அனுப்புகின்றன. இங்குதான் கண்ணீர் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை லாக்கிரிமால் சுரப்பிகள் என அழைக்கப்படுகின்றன.

### (Iachrymal glands)

இங்கு இரத்தத்திலிருந்து திரவமானது எடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறது.

நமது கண்களில் கண்ணீர் எப்பொழுதும் பரவியிருப்பதால் தான் கண்கள் சௌகரியத்தை அனுபவிக்கின்றன. நாமும் பார்வையைப் பெற்றுக்கொள்கிறோம். லாக்கிரிமால் சுரப்பிகள் கண்ணிற்கு ஈரத் தன்மையைக் கொடுக்கும். நீரை அனுப்பும்போது, நாம சௌகரியமாகக் கண்களை உருட்டி விழிக்க முடிகிறது. நன்றாகப் பார்க்கவும் முடிகிறது. அத்துடன் கண்ணிமைகளும் மிக வேகமாக இமைத்து காரிலுள்ள **winpscreen**-ஐ **wiper**-கள் துடைப்பது போன்ற ஒரு வேலையைச் செய்கின்றன. கண்ணிற்குத் தெரியாத இந்த நீர் கண் உருண்டைகளைத் துடைத்து ஈரப்பசையோடு வைத்துக் கொள்கின்றது. கண்களில் விழும் தூசிகள் வெகு வேகமாக ஒதுக்கப்படுகின்றன. கண்மணியின் மீது மூடியிருக்கும் விழி வெண்படலம் சார்ந்த மெல்லிய தோல் உலர்ந்து போகாதபடி காக்கப்படுகின்றனது. இவ்வாறு கண்ணீரினால் ஈரப்பதன் தொடர்ந்து கண்களுக்குக் கொடுக்கப்படாவிட்டால் கண்களில் மேற்புறப் பகுதி உலர்ந்து, எரிச்சல் மிகுந்து வேதனை கொடுக்க ஆரம்பித்துவிடும். வெகு சீக்கிரததில் மெல்லிய ஜவ்வுகள் பழுதடைந்து கண்கள் குருடாகிப்போகும்.

விழிவெண்படலத்தில் மாத்திரமல்ல, விழித்திரைப் படலத்தையும் கண்மணியையும் மூடிக்கொண்டிருக்கும் அந்த மெல்லிய பகுதியிலும் உராய்வு ஏற்படாதவண்ணம் கண்ணீர் பாதுகாக்கின்றது. அது மாத்திரமல்ல, கண்ணின் மேற்பகுதிகளிலும் சமமற்றுக் காணப்படும் இடங்களையும சரிப்படுத்தி கண்களின் பார்க்கும் திறனைப் பெருக்குகின்றது. மேலும் தொற்றை ஒழிக்கும் மருந்தாகவும் இயங்குகின்றது. இத்தகைய தொற்றுகளுக்கு எதிராகச் செயல் புரியும் தன்மையுள்ள **lysozyme** கண்ணீரில் இருக்கிறது எனபதைக் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்தவர் பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்த அலெக சாண்டர் பிளமிங ஆவார்.

### கண்ணீரின் கலவை

கண்ணீர் சாதராண நீரல்ல. அதன் கைப்புத் தன்மையினின்றே நாம் அதை நன்றாகப் புரிந்து கொள்ளலாம். அதில் பல தாது உப்புக்களும், சிறிதளவு புரதமும் சிறிதளவு குளுக்கோசும் அடங்கியிருக்கின்றன.

நமது கண்களை மூடும் கண்ணீரானது பலவகையான சுரப்பி களினின்று வெளிவந்த மூன்று வகையான திரவப் படலங் களால் ஆனது. விழிவெண்படலத்தை அடுத்து, கண் ணின் வெண்பகுதியிலுள்ள சுரப்பிகளினின்று சுரக்கப்பட்ட பாதுகாப்பான ஒரு மெல்லிய திரவப்படலம், முதலாவது படிகின்றது. அதன் பின்னர் லாக்கிரிமால் சுரப்பிகளால் சுரக்கப்படும் நீர் போன்ற திரவம் கண்ணில் படருகின்றது. கடைசியாக கண் இமைகளின் உட்புற வரிசையில் அமைந்திருக்கும் ஆழமற்ற சுரப்பிகளினினறு வரும் எண் ணெய்ப்படலமானது கண்ணின் மேற்பகுதியில் படிகின் றது. கண்ணிமைகள் வெகு வேகமாக மூடித்திறக்கும்போது, கண்ணீர் திரவமானது கண்ணின் முன் பகுதிக்குத் தள்ளப் பட்டு மூக்கிற்கு அருகில் அமைந்திருக்கும் கண்ணின் ஓரப்பகுதியின் வழியாக மூக்கிற்குள் செல்லுகிறது. இவ் வாறு மூக்கின் உட்புறக் குழல் ஈரமடைகிறது. இதனால் தான் நாம் அழும்போது மூக்கின் வழியாகவும் நீர் சொட்டு கிறது.

### கண்ணீர் வரும் சந்தர்ப்பங்கள்

சில சமயங்களில் நாம் கண்ணீர் உகுத்து அழுகின்றோம். உறவினர்கள், நண்பர்கள் போன்றோரை இழக்கக் கொடுக்கும் போதும் வேதனை மிகுந்த துக்கம், ஏமாற்றம், துயரம் ஏன் திகைப்பு நிறைந்த கோபம் ஆகியவை நம்மைத் தாக்கும் போதும் நாம் கண்ணீர் வடிக்கின்றோம். சில சமயங்களில் மனப்பாரம் குறையும் போது அல்லது மகிழ்ச்சி மனதை நிறைக்கும் போதும் நாம் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றோம்.

பிறந்த குழந்தைகள் முதல் மூச்சை எடுக்கும்போது அழ ஆரம்பிக்கின்றார்கள். ஆனால் பொதுவாக அதன் பின்னர் இரண்டு மூன்று வாரங்களுக்கு அழுதாலும், கண்ணீர் வருவதில்லை. குழந்தையின் முதல் அழுகை அதன் நுரையீரலுக்குள் காற்றைப் புகுத்துகின்றது. அதன் பின்னர் அசௌகரியமாக இருந்தாலோ, பசியின் மிகுதியாலோ அல்லது தன்னை மற்றவர்கள் பார்க்க வேணடும், நேசிக்க வேணடும் என விருமபுவதாலோ குழந்தைகள் அழுகின்றன. குழந்தை வளர வளர அழுகை குறைகின்றது எனினும் அழுதால் தான் சீக்கிரத்தில் காரியங்கள் பலிக்கும் என்று தெரிந்து கொண்ட பிறகு அழுது சாதிக்க ஆரம்பித்து விடுகிறது.

அநேக நாடுகளில் பொதுவாக ஆண்களைவிட பெண்களும் குழந்தைகளுமே அழுவது பழக்கமாக இருக்கிறது. ஆண்களும் பையனகளும் அழுவது ஆண் தன்மைக்கு இழுக்கானது என்ற எண்ணமே பரவலாகக் காணப்படுகின்றது.

### கண்ணீரின் நன்மை

பொதுவாக நமது துக்கத்தை அழுது வெளியேற்றுவது நமது உணர்வுகளுக்கும், நமது மன இறுக்கத்தைப் போக்குவதற்கும் பெருமளவில் உதவி செய்கின்றது என்கிறார் பேராசிரியர் டாக்டர் இ.ஜேம்ஸ் லிபர்மேன் என்பவர்.

கண்ணீர் செய்ய வேண்டிய குறிப்பிட்ட வேலைகளுண்டு. உடல் சம்பந்தப்பட்ட வகையில் கண்களைப் பாதுகாத்து, ஈரப்பதனைக் கொடுத்து தொற்றுக்களைப் போக்கி கண்களைக் கழுவி மூக்கினுட் பகுதியை நனைக்கின்றது. இதயமே வெடித்துப் போகும் அளவிறகு நெஞ்சில் வேதனை பெருகும்போது கண்ணீர் பொங்கி வடிந்து மனப் பாரத்தைக் குறைக்கலாம். கண்ணீர் வடிப்பது அனைவருக்கும் உரிய இயல்பேயாகும்.

நாம் வாழும் உலகில் சோகத்திற்குப் பஞ்சமில்லை. யுத்தங்கள், பூமி அதிர்ச்சிகள், புயல்கள், வெள்ளங்கள், பஞ்சங்கள், விபத்துகள், மரணங்கள், வியாதிகள், கடலிலும் தரையில் சம்பவிக்கும் ஆபத்துகள் ஆகியவைகளைப் பற்றித் தினமும் கேட்டுக் கொண்டு தானிருக்கிறோம். இந்நிலை நீடிக்கும் வரை வெள்ளம் போனறு கண்ணீரை உகுக்கத்தான் போகிறோம். ஒரு நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்து சிறந்த வாழ்வு வாழ்வோம்.! ★

### தினசரி தியானம்

#### விவேகச் சிந்தனைகள்

தியானம் என்பது என்ன? புலன்களை அடக்குவதற்கான சக்தியைத் தருவது தான் தியானம். பார், அதோ ஓர் அழகான பொருள் என்று இயற்கை நம்மை அழைக்கிறது " கண்களே பார்க்காதீர்கள்" என்று நான் கண்களுக்கு உத்தரவிடுகிறேன். கண்கள் பார்ப்பதில்லை. "இதோ நல்ல நறுமணம் முகர்ந்து பார்" என்கிறது இயற்கை. முகராதே என்று நான் சொல்கிறேன். இயற்கையின் கொடுமை தொடர்கிறது. என் குழந்தைகளில் ஒன்றைக் கொல்கிறது. "மடையா உட்கார்ந்து அழு துக்கத்தில் அழுந்திச் சாகு" என்கிறது. அழுந்த வேண்டிய அவசியமில்லை என்று கூறி குதித்தெழுகிறேன் நான். சுதந்திரமாக இருக்கவேண்டும் எப்போதாவது இதைப் பயிற்சி செய்து பாருங்கள்.

**சுவாமி விவேகானந்தர்**

### தவக்காலச் சிந்தனை-38

ஒரு புறத்தில் பரிசேயர்களின் அடிப்படைவாதத்திற்கு இயேசு ஒரு அச்சுறுத்துதலாக இருந்ததால் அவரை அழித்துவிட திட்டமிடுகின்றனர். மறுபுறத்தில் சதுசேயர்களின் அரசியல் லாபத்திற்கு இயேசு இடையூறாக இருந் தால் "அனைவருக்காகவும் ஒருவன் இறப்பது மேல்" என்று முடிவு செய்கின்றனர். இறை அனுபவத்தை சட்டங்களாலும், சடங்குகளா லும் அலங்கரித்து அதற்கு எதிராக உள்ள வர்களை அடக்கு முறையால் ஒடுக்கிவிட நினைப்பவர்களுக்கு சீர்திருத்த சிந்தனைகளும், அணுகு முறைகளும் சகித்துக் கொள்ள முடியாதவைகளாக மாறுவதைப் பார்க்கின்றோம். மதங்களுக்கு அரசியல் முலாம் பூசி மக்களிடையே மதவெறியை விதைக் கின்ற காலத்தில் நாம் வாழ்கின்றோம். ஆதாயத்தால் இதை வைத்து அரசியல் நடத்தும் சொகுசு வெறியர்கள் இயேசு போன்ற உண்மைக்காய் உரிமையுடன் போராடுபவர்களை ஒழித்து விடுகின்றனர். பொருளற்ற பாரம்பரிய சம்பிரதாயங் களைக் கடந்து நிற்கும் இறைவனுடன் நம் உள்ளத்தின் ஆழத்தில் உறவு கொள்ள வில்லை என்றால் நாம் தீவிரவாத அடிப்படை வாதிகளாகி விடுவோம். நமது சுயநலத்திற்காக மதம் என்ற நிறுவனத்தை முடக்கி விட் டோமா?

**காவலன்**

# யாழ். மாவட்டத்தில் வாக்களித்தோர் விபரம்

(திருநெல்வேலி)

நேற்றையதினம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதி வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றில் வாக்களித்த வாக்காளர் எண்ணிக்கை பற்றிய விபரம் வருமாறு,

| வாக்களிப்பு நிலையம் | வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | வாக்களித்-தோர் |
|---|---|---|
| 1. கண்டாவளை மகாவித்தியாலயம் | 890 | 616 |
| 2. உருத்திரபுரம் மகாவித்தியாலயம் | 4421 | 2115 |
| 3. பிரபுந்தனாறு அ.த.க வித்தியாலயம் | 1724 | 1413 |
| 4. திருச்சி இராமநாதபுரம் ம.வித்தியாலயம் | 1374 | 899 |
| 5. கிளி.வேம்பொடுகேணி அ.த.க.பாடசாலை | 727 | 312 |
| 6. யாழ்.மருதங்கேணி இந்து த.க.வித்தியாலயம் | 1143 | 327 |
| 7. உடுத்துறை மகாவித்தியாலயம் | 864 | 582 |
| 8. பளை மத்திய கல்லூரி | 1972 | 990 |
| 9. முரசுமோட்டை அ.த.க வித்தியாலயம் | 1062 | 490 |
| 10. பரந்தன் இந்து மகா வித்தியாலயம் | 1361 | 891 |
| 11. இராமநாதபுரம் மகாவித்தியாலயம் | 899 | 475 |
| 12. கனகபுரம் அ.த.க பாடசாலை | 6662 | 3175 |
| 13. பரந்தன் த.க.பாடசாலை | 1083 | 496 |
| 14. கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் | 1521 | 851 |
| 15. கிளிநொச்சி இந்து த.க.பாடசாலை | 1333 | 659 |
| 16. பரந்தன் இந்து மகாவித்தியாலயம் | 1361 | 470 |
| 17. திருவையாறு கனிஷ்ட வித்தியாலயம் | 1308 | 704 |
| 18. திருவையாறு மகாவித்தியாலயம் | 1196 | 438 |
| 19. சுண்டிக்குளம் | 34 | 32 |
| 20. கேவில் | 397 | 265 |
| 21. வெற்றிலைக்கேணி | 1189 | 700 |
| 22. ஆழியவளை | 722 | 520 |
| 23. மருதங்கேணி இந்து வித்தியாலயம். | 1143 | 660 |
| 24. தாளையடி றோ.த.க | 680 | 299 |
| 25. செம்பியன்பற்று அ.த.க பாடசாலை. | 1274 | 624 |

# யாழ்- மாவட்ட தேர்தல் சிறப்பாக நடைபெற்றது

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ் செயலகத்திலிருந்து பவன் ஐங்கரன்)

பொலிஸார் விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினரின் பூரண ஒத்துழைப்புடன் யாழ் தேர்தல் மாவட்டத்தில் 13வது பாராளுமன்றத் தேர்தல் சிறந்த முறையில் நடைபெற்றதாக யாழ் அரச அதிபரும், யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான செ.பத்மநாதன் தெரிவித்தார்.

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக நேற்று நள்ளிரவு யாழ் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம், யாழ். உதவி தேர்தல் ஆணையாளர் சி.நடராசா,மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆகியோர் கலந்துகொண்டனர். — — — (சு)

### துப்பாக்கி...

கைத்துப்பாக்கி ஒன்றுடன் வாக்காளர்களை மிரட்டி அச்சுறுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து, பிரஸ்தாப வாகனத்திற்கு பாதுகாப்பாகச் சென்ற பொலிஸார் கொடிகாமம் பகுதியில் நின்ற வாக்காளர் சிலரையும் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியதுடன் அடையாள அட்டைகளைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். இதனால் வாக்காளர் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டது. (த)

## யாழ். மாவட்டத்தில் 50 வீத வாக்களிப்பு

யாழ். மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற 13ஆவது பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பில் 50 வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

காலை 7மணிமுதல் மாலை 4 மணிவரை மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் வாக்குப்பதிவுகள் இடம்பெற்றன. மக்கள் சுறுசுறுப்பாக தமது வாக்ககுகளைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டியதாக எமது பிரதேசச் செய்தியாளர்கள் தெரிவித்தனர். — — — — — (47)

### ஐக்கிய...

| | |
|---|---|
| அளிக்கப்பட்ட வாக்கு | -8588 |
| செல்லுபடியான வாக்கு | -8451 |
| **இரத்தினபுரி மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -4886 |
| ஐ.தே.கட்சி | -2839 |
| ஜாதிக ஹெல உறுமய | -582 |
| அளிக்கப்பட்டவை | -8463 |
| செல்லுபடியானவை | -8331 |
| **மொனறாகலை மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -4667 |
| ஐ.தே.கட்சி | -2521 |
| ஜாதிக ஹெல உறுமய | -178 |
| அளிக்கப்பட்டவை | -7508 |
| செல்லுபடியானவை | -7385 |
| **திருகோணமலை மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -3362 |
| தமிழரசுக் கட்சி | -1892 |
| ஐ.தே.கட்சி | -1463 |
| ஸ்ரீ.மு.கா. | -1450 |
| அளிக்கப்பட்டவை | -8581 |
| செல்லுபடியானவை | -8308 |
| **மாத்தறை மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -8201 |
| ஐ.தே.க. | -3665 |
| தேசிய ஹெல உறுமய | -788 |
| அளிக்கப்பட்டவை | -12884 |
| செல்லுபடியானவை | -12677 |
| **பொலநறுவை மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -3851 |
| ஐ.தே.க. | -2200 |
| ஜாதிக ஹெல உறுமய | -108 |
| **புத்தளம் மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -3564 |
| ஐ.தே.க. | -2559 |
| ஜாதிக ஹெல உறுமய | -440 |
| **மாத்தளை மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -5093 |
| ஐ.தே.க. | -3014 |
| ஜாதிக ஹெல உறுமய | -512 |
| **வன்னி மாவட்டம்** | |
| தமிழரசுக் கட்சி | -1942 |
| ஐ.ம.சு.கூட்டு | -1132 |
| ஐ.தே.க. | -799 |
| அளிக்கப்பட்டவை | -4243 |
| செல்லுபடியானவை | -4445 |
| **கேகாலை மாவட்டம்** | |
| ஐ.ம.சு.கூட்டு | -8894 |
| ஐ.தே.க. | -5502 |
| ஜாதிக ஹெல உறுமய | -858 |
| அளிக்கப்பட்டவை | -15611 |
| செல்லுபடியானவை | -15282 |

(அச்சுக்குப் போகும்வரை அறிவிக்கப்பட்ட முடிவுகள்)


# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு கட்டடங்கள் திணைக்களம்

1. தலைவர், கேள்விச் சபை பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் கடற்கரைவீதி யாழ்ப்பாணம், அவர்கள் பருத்தித்துறையில் பிராந்திய செயலர் அலுவலகம் கட்டடம்-1 இன் நிர்மாண வேலைகளுக்கான மூடிய கேள்விகளை 21.4.2004 அன்று மு.ப.10.00 மணிவரை பெற்றுக்கொள்வார்.

2. பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடங்கள் திணைக்களம் கடற்கரை வீதி யாழ்ப்பாணம, என்ற முகவரியில் மீள பெறப்பட முடியாத கட்டணமாக ரூ. 1000 வை மட்டும் செலுத்தி 16.4.2004 அன்று பி.ப.3.30 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. பிரதம பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களம் கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் கேள்விப் பத்திரங்கள் மூடப்பட்ட உடனும் திறக்கப்படும்.

4. இலங்கைத் தேசிய நிர்மாண ஒன்றியத்தின் அங்கத்துவத்தையும் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி கல்விநிறுவகத்தில் தரம் M7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்து கொண்ட ஒப்பந்தகாரர்களுக்கும் நிர்மாண ஒப்பந்தகாரர்களின் பதிவு தரப்படுத்தலும் பற்றிய தேசிய திட்டத்தில் கட்டடநிர்மாண ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்து ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதற்கு முன்னதாக ஒப்பந்தக்காரர்கள் பதிவுப் புத்தகத்தையும் NCASL இன் அங்கத்துவ அட்டையையும் சமர்ப்பிக்கவேண்டும்.

5. மூடிய கேள்விப் பத்திரங்கள் தலைவர், கேள்விச்சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்படலாம். அல்லது நேரில் கையளிக்கப்படலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் கட்டணங்கள் எதுவுமின்றி பரீட்சிக்கப்படும். மேலதிக விபரங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

WS. மொல்லிகொட
கட்டடங்கள் பிரதி இயக்குநர்,
கட்டடங்கள் திணைக்களம்,
செத்சிறிபாய, ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டே,
பத்தரமுல்ல.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ். பல்கலைக்கழகத்தின் 27.03.2004ல் நடைபெற்ற 23வது பட்டமளிப்பு விழாவில் 2003ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவத்துறையில்,
பல்துறைத் திறமைக்கான
**பேராசிரியர் ஏ.துரைராஜா நினைவு தங்கப்பதக்கத்தினையும்,**
பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களுக்கிடையிலான பல்துறையிலும் சிறந்து விளங்கும் ஒருவருக்கான பேராசிரியர் ஏ.துரைராஜா நினைவு சிறப்பு தங்கப்பதக்கத்தினையும் (Overall performance) பெற்ற,

**செல்வி செல்லையா குகாஜினி B.B.A(Hons)**

(யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும்– மாணவ தலைவியும்)

அவர்கள் மேலும் மேலும் பல சாதனைகளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி, வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
சந்திரசேகரம் குடும்பம்– கனடா
பஞ்சநாதன் குடும்பம்– ஜேர்மனி
சுரேந்திரராஜன் குடும்பம்– ஜேர்மனி

(C/7483)



## Information Technology Park

Ministry of Rehabilitation, Resettlement & Refugees,
National Housing Secretariat Building,
Near Kachcheri, Kandy Road, Jaffna, Sri Lanka.

Phone:021-2223641 Director- 021- 2223643

தற்போது ஆரம்பமாக உள்ள பாடசாலை விடுமுறையை பிரயோசனமாக கழிக்க விரும்புகின்றீர்களா?

சாதாரண, உயர்தர மாணவர்களுக்கான விடுமுறைக்கால விசேட வகுப்புக்கள்.

# FIT PROGRAM

Diploma in Fundamental of Information Technology (FIT)

Are you FIT in Computer Applications?

If not,

Join our FIT Program in IT Park, Jaffna.
(This is a right choice for your bright future)

FIRST INTRODUCTION MEETING:
6th April 2004, 11.00 am at IT PARK HALL

COURSE COMMENCESS ON :08/04/2004

Information: Director | Centre for Information Technology | Further Details: Course Manager


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.